[1995 ஏப்ரல் 20

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், நீங்களே ஒரு உறுப்பினரைத் தாராளமாகக் கேளுங்கள் என்கிறீர்கள்; அதை நான் அனுமதிக்க வேண்டும். அந்தியூர் சட்டமன்ற உறுப்பினருக்குப் பதில் சொல்லுங்கள்; போதும்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: அந்தியூர் ஒன்றியம், பர்கூர் பகுதியில் இருக்கக்கூடிய மலைப் பகுதியிலே இதுபோன்ற பயிற்சி மையங்கள் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை. மேலும் எந்தத் துறையின் மூலம் இதுபோன்ற பயிற்சி மையங்கள் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட இந்த வினாவிற்கு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தெரிவு செய்து, அப்படித் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தினர்களை எங்களிடம் அனுப்பினால், தமிழ்நாடு கதர் வாரியத்தின் மூலம் அந்த நபர்களுக்கு நாங்கள் பயிற்சி அளிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்தத் துறைக்கு தனியாகக் கேள்வி போட்டால் தக்க பதில் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

367—

சிறிய பேருந்துகள் இயக்குதல்

38152—திரு. காஞ்சி பன்னீர்செல்வம்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர், காஞ்சீபுரத்தைச் சுற்றியுள்ள சிற்றூர்களுக்கு சிறிய பேருந்துகள் இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உத்திரமேரூர், காஞ்சிபுரம் ஆகிய ஊர்களைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு தற்பொழுது இயக்கப்படும் சாதாரணப் பேருந்துகளே போதுமானதாக உள்ளது. எனவே சிறிய பேருந்துகள் (Mini Buses) இயக்கும் திட்டம் ஏதுமில்லை.